13 DEC 1965
STATE LEGISLATURE, MAD

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 2nd August 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at nine of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Outbreak of Plague at Vellore

* 50 *Q.*—SRI S. J. RAMASWAMI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of persons affected by the outbreak of plague recently in Vellore;

(*b*) the steps taken to arrest the spread of the same; and

(*c*) the number of persons died on account of the same?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: *(அ) ஒன்று.*

(இ) பிளேக் தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, உடனுக்குடன் தேவையான பிளேக் தடுப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தண்ணீரில் கரையக் கூடிய B H C *50 பர்சென்ட் பவுடர் வீடுகளில் தெளிக்கப்பட்டது. சயாஞேகாஸ்* 'A' *டஸ்டைக் கொண்டு எலி வளைகளிலும் பிற எலிப்பொந்துகளிலும் புகையூட்டப்பட்டது. மேலும்* B H C *10 பர்சென்ட் பவுடரும் உபயோகிக்கப்பட்டது. நோயைத் தடுப்பதற்காக, பொதுமக்களுக்கு பிளேக் தடுப்பு ஊசி போடப்பட்டது. இவ்வேலைக்குத் தேவையான கூடுதல் ஊழியர்கள் அமர்த்தப் பட்டார்கள்.*

(உ) ஒருவருமில்லை.

திரு. கோ. பாலகிருஷ்ணன்: *வேலூரில் பரவிய பிளேக் வியாதி வேலூரில் மட்டும் நின்று விட்டதா அல்லது வேறு எங்காகிலும் பரவி இருக்கிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்து இருக்கிறதா ?*

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: *வேலூரில் மாத்திரம் தான் வந்ததாக அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருக்கிறது. பிறகு வட ஆற்காட்டில் உள்ள ஆரணியில் வந்ததாகத் தகவல் கிடைத்து பிறகு அது பிளேக் அல்ல என்று கூறப்பட்டது.*

Absorption of Former District Board Employees in State Government

* 51 *Q.*—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the employees in the Health branch of the former District Boards have been absorbed in service under the State Government; and

[2nd August 1965

(b) if so, whether they are allowed future annual increments?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) விதிகளுக்கிணங்க அவர்களுக்கு சம்பள உயர்வு அனுமதிக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : முன்னுள் மாவட்டக்கழகத்தில் பணியாற்றிய பலரை நிரந்தரமாக ஆக்கியும், மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றுவதற்கான வாய்ப்புகளை கொடுத்த அதே நேரத்தில் அதே பிரிவில் வேலை செய்கின்ற சுகாதாரப்பிரிவு பணியாளர்கள் நாளது வரையில் நிரந்தரமாக்கப்படவில்லை. சம்பள உயர்வும் கொடுக்கப்படவில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றுவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I shall answer this question in English. Their scales of pay have since been revised and increments have been given. They have also been provincialised.

திரு. வி. எஸ். எஸ். மணி : கடந்த பத்து ஆண்டுகாலமாக அந்த ஒரு பிரிவுக்கு மட்டும் வசதிகள் கொடுக்காததற்கு காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த டிஸ்டிரிக்ட் போர்டு, பஞ்சாயத்து ஆக்ட் வந்தபிறகு நீலகிரி ஜில்லாவில், பஞ்சாயத்து ஊழியர்கள் 106 பேர், அவர்கள் எல்லோரும் அப்போதே அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஆனால் அவர்கள் முதலில் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எல்லோரும் பர்மனன்ட் செய்யப்பட்டு விட்டார்கள்.

திரு. சா. கணேசன் : இந்தத் தமிழக மாநிலத்தில் முன்னுள் ஜில்லா போர்டு அல்லது மாவட்ட வாரியங்களில் வேலைபார்த்து இப்பொழுது அரசாங்க ஊழியர்களாக ஆகியிருப்பவர்களுடைய தொகை மொத்தம் எவ்வளவு இருக்கும், அவர்களுடைய சம்பளம் எவ்வளவு ஆகும் என்று கனம் அமைச்சரவர்கள் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Blood Donors

* 52 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of persons (males and females) who donated blood in the blood-banks in the State during the period April to September 1964; and

(b) the number among them who donated freely?